விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 31 வெள்ளிக்கிழமை (16.08.2002) தொலைபேசி 3378 ஒலி 240

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு
சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 2480


## சமாதானப்பேச்சுக்கான திகதி நிர்ணயிப்பு

# மிலிந்த - பாலசிங்கம் சந்திப்புக்கு ஜனாதிபதி சந்திரிகா பாராட்டு

## முன்னாள் அமைச்சர் கதிர்காமர் அறிவிப்பு

(நமது நிருபர்)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்து பேச்சுக்கான திகதியை நிர்ணயம் செய்ததை ஜனாதிபதி சந்திரிகா பாராட்டியிருப்பதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளை ஆதரித்து வருகின்றார் அவருக்கு பாராளுமன்றத்தைக் கலைக்கும் எண்ணம் அறவே இல்லை என்று கூறிய கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில்:

ஜனாதிபதி பாராளுமன்றத்தை எக்காரணம் கொண்டும் கலைக்க மாட்டாரென்ற உத்தரவாதத்தை சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவுக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ந் திகதி ஐக்கிய தேசிய முன்னணி பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகின்றது.

பதவியேற்று ஒரு வருடத்திற்குப்

(10ம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் பேச்சுவார்த்தையில் ஹக்கீமும் கலந்துகொள்வார்

### அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் அரச தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவராக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் இடம் பெறவுள்ளார் என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசதரப்பிலிருந்து கலந்து கொள்ளும் நான்கு பிரதிநிதிகளில் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரும் விடுதலைப்புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட நான்கு பிரதிநிதிகளும் இடம்பெறவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(த)

## விமானப்படையின் வை-8 ரக விமானம் களுத்துறையில் வீழ்ந்து நொருங்கியது

### படையினர் ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)

இரத்மலானை விமானப்படைத் தளத்தில் இருந்து புறப்பட்ட இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான சீனத் தயாரிப்பு வை-08 ரக விமானம் களுத்துறை நாகொடப்பகுதியில் வீழ்ந்து நொருங்கியுள்ளது.

நேற்று நண்பகல் 12.25 மணியளவில் ஐந்து விமானப்படையினருடன் புறப்பட்ட இவ்விமானம் புறப்பட்ட பத்து நிமிடத்தில் இயந்திரம் ஒன்று தீப்பற்றி கொண்டதால் வீழ்ந்து நொருங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விமானத்தில் பயணம் செய்த மூன்று விமான ஓட்டிகள் இரண்டு விமானப் படை அதிகாரிகள் உட்பட ஐவரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்திருக்கலாமென்று அஞ்சப்படுகிறது.

எனினும் ஏவரது உடல்களும்

(10ம் பக்கம் பார்க்க)



வருகின்றார் அவருக்கு பாராளுமன்றத்தைக் கலைக்கும் எண்ணம் அறவே இல்லை என்று கூறிய கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில்:

மாட்டாரென்ற உத்தரவாதத்தை சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவுக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளளார்.

பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகின்றது.

பதவியேற்று ஒரு வருடத்திற்குப்

(10ம் பக்கம் பார்க்க)

டன் புறப்பட்ட இவ்விமானம் புறப்பட்ட பத்து நிமிடத்தில் இயந்திரம் ஒன்று

எனினும் எவரது உடல்களும்

(10ம் பக்கம் பார்க்க)



நேற்று களுத்துறைப் பகுதியில் வீழ்ந்து நொருங்கிய வை-8 ரக விமானத்தைப் படத்தில் காணலாம்

# காணாமல் போனோர் சங்க பிரதிநிதிகள் பிரதமருடன் சந்திப்பு

## சிறைச்சாலைகளைப் பார்வையிடவும் அனுமதி

(கொழும்பு)

காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் 6பேர் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழர் விடுதலைப் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, என். ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இச் சம்பவத்தின்போது காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் தமது உறவுகள் உயிருடன் உள்ளனரா என்பதை முதலில் தெரிந்து கொள்வதற்கு நாட்டிலுள்ள அனைத்துச் சிறைச்சாலைகளையும் சென்று பார்வையிடுவதற்கு அனுமதியளிக்குமாறு பிரதமரிடம் கோரினர்.

அவர்களது கோரிக்கைக்கு பிரதமர் ரணில் உடனடியாகவே இணக்

(10ம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.மு. எம்.பிகள் 15பேர் பிரதமருடன் சந்திப்பு?

(கொழும்பு)

ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிரதமர் ரணிலைச் சந்தித்து தமது திட்டமொன்றைச் சமர்ப்பித்துள்ளதாக அரச வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

# சமாதானப்பேச்சுக்கு இணங்கிய பின் புலிகள் மீதான தடை அவசியமில்லை

## செய்தியாளர் மாநாட்டில் பீரிஸ்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் அடுத்தமாத நடுப்பகுதியில் பேச்சுவார்த்தைகள் திட்டமிட்டபடி ஆரம்பமாகுமென அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

தாய்லாந்தில் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு 10நாட்களுக்கு முன்னர் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படும். சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருப்பதால் அவர்கள் மீதான தடையை அமுலில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால் சமாதானப்பேச்சுவாரத்களின் போது தனிநாட்டுக் கோரிக்கையைத் தவிர ஏனைய கோரிக்கையை பரிசீலிப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது.

தாய்லாந்தில் ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகள் மாதத்தில் இரண்டு தடவைகள் இடம்பெறும் தேவை ஏற்படின் அது மேலும் நீடிக்கப்படவும் வாய்ப்புக்கள் உண்டு.

அரச தரப்பில் நான்கு பேரும் விடுதலைப்புலிகளின் தரப்பில் நான்கு பேரும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப்பேச்சுவாரத்தைகளில் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு அரசாங்கம் விரும்புகின்றது என்றார்.

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசு - புலிகளுக்கு எதிராக
# 740 வலுவான முறைப்பாடுகள்
## 174 முறைப்பாடுகள் மீறல்களாக நிரூபிப்பு

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள், இலங்கை அரசாங்கம் என்பவற்றுக்கு எதிராக 740 வலுவான முறைப்பாடுகள் ஸ்கண்டினேவிய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குழுவின் ஊடகத்தகவல அதிகாரி பிறெய்ட்டர் றொக்ஹொல்சன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக 576 முறைப்பாடுகளும் அரசாங்கத்திற்கு எதிராக 164 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச்செய்யப்பட்ட 146 முறைப்பாடுகளும், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட 28 முறைப்பாடுகளும் மீறல்களாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் சிறுவர் தொடர்பாக 55 சம்பவங்களும், ஆட்கடத்தல் தொடர்பாக 43 சம்பவங்களும், துன்புறுத்தல் தொடர்பாக 26 சம்பவங்களும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 11 துன்புறுத்தல் சம்பவங்களும், சுதந்திரமான நடமாட்டத்தைத் தடுத்த 6 சம்பவங்களும்மீனவர் மீதான கட்டுப்பாடுகள் தொடர்பாக 5 சம்பவங்களும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இதே வேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறுவர் ஆட்சேர்ப்பு தொடர்பான 125 முறைப்பாடுகளும், ஆட் கடத்தல் தொடர்பாக 116 முறைப்பாடுகளும், துன்புறுத்தல் தொடர்பாக 71 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக 39 துன்புறுத்தல் முறைப்பாடுகளும் பொதுமக்களின் காணிகள் சொத்துக்களைப் பயன்படுத்துகின்றமை தொடர்பாக பொதுமக்கள் நடமாட்டத்தைக்கட்டுப்படுத்தியமை தொடர்பாக 10 முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆக் கூடுதலான 231 முறைப்பாடுகளாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

ஆகக் குறைந்த 54 முறைப்பாடுகள் மன்னார்மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. (உ)

# தையல் இயந்திரங்கள் கடனடிப்படையில் வழங்கல்

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் சிங்கர் தையல் இயந்திரத்தினை கடனடிப்படையில் வழங்குவதற்கான விண்ணப்பத்தினை கோரியுள்ளது.

கொள்வனவு செய்யப்பட்ட தையல் இயந்திரங்கள் 10மாத கடன் திட்டத்தில் வழங்கப்படவுள்ளன.

கடன்திட்ட உடன்படிக்கையின்படி கடன்முழுமையாக கட்டிமுடித்தபின் இயந்திரத்தினுடைய உரிமை சான்று வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடனடிப்படையில் தையல் இயந்திரங்களை பெறவிரும்பும் பாவனையாளர்கள் எதிர்வரும்20ம்திகதிக்கு முன்பு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-23)

# முல்லைக் கடலில் கைப்பற்றப்பட்ட புலிகளின் படகுகள் விடுவிப்பு
## பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஏப்ரல்மாதம்24ஆம் திகதி முல்லைத்தீவு கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் 3 படகுகளும் விடுவிக்கப்பட்டிருப்பதாகபாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று பாராளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாக இப்படகுகள் விடுவிக்கப்பட்டதாகவும்

இப்படகுகள் கைப்பற்றப்பட்டபோது, அவற்றில் எஸ்.எம்.ஜி.30 எம்.எம்- ஒன்று சினைப்பர் ரைபிள்-2, L-16 ரைபிள்- 1, ஆர்.பி.ஜி-20 மோட்டார் 20, கைக்குண்டு 80 உட்பட படகில் பொருத்தப்பட்ட இரு ஆயுதங்கள் இருந்ததாகவும்,

வடக்கில் இருந்துகிழக்குக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற படகுகள் இவை எனவும் திலக் மாரப்பன மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# பூச்சிமருந்தை வீணாக்காது நாய்களுக்கு வழங்கவும்
## யாழ். மாநகர சபை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரால் நல்லூர் ஆலயத்தினை அண்டிய பகுதிகளிலுள்ள நாய்களுக்கு ஒருவாரத்திற்கு முன் பூச்சி மருந்து கொடுக்கப்பட்டுள்ள போதிலும் நாய்வளர்ப்போர் சிலர் ஒரு வாரம் கடந்தும் அப்பூச்சிமருந்தைநாய்களுக்கு கொடுக்கவில்லை என தெரியவருவதாக மாநகர ஆணையாளர் இ. இராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

இப்பூச்சி மருந்தை கொடுப்பதன் மூலம் நாய்களினால் நல்லூர் வீதிகளில் பரப்பப்படுகின்றதெனக் கருதப்படும் தோற் புழுத்தொல்லையினை இல்லாது ஒழிக்க முடியும்.

இப் பூச்சி மருந்தை பெற்றவர்கள் அதனை துஷ்பிரயோகம் செய்யாது தமது நாய்களுக்கு கொடுக்கும் படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

# யாழ்.மா.ச.உறுப்பினர்கள் கறுப்புத் துணியால் வாயைக்கட்டி எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகரசபை முதல்வர் செ.சுந்தையன் அலுவலகத்தில் வைத்து தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று மாநகரசபை உறுப்பினர்கள் 14பேர்தமது வாயை கறுப்புத்துணியினால் கட்டிக்கொண்டு மாநகரசபை வாயிலில் அமர்ந்திருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

முற்பகல் 10மணிமுதல் 12 மணிவரை இடம்பெற்ற இவ் எதிர்ப்புப் போராட்டத்தில் புளொட் அமைப்பைச் சேர்ந்த ஆறுபேரும், ஈ.பி.டி பிஐச் சேர்ந்த ஆறுபேரும் ஈ.பி.ஆர் எல்.எவ் வரதர்அணியைச் சேர்ந்த இரண்டுபேரும் ஈடுபட்டனர்.

(இ-2)

# நொராட்நிறுவனகுழுவினர் நேற்று யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் மீன்பிடித்துறையை விருத்திசெய்வதற்கும் நவீனமயப்படுத்தும் திட்டங்களை வகுப்பதற்கும் நோர்வே நாட்டைச் சேர்ந்த நொராட் நிறுவன உயர்மட்டக்குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இந்நிறுவனத்தின் அதிகாரிகளான அங்கலின், செல்வி கற்றின் நோமன், ஆகியோரும் இவர்களுடன் கலாநிதி சிவலிங்கம், கணேந்திரன் ஆகியோரும் நேற்றுமாலை 4மணியளவில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

இவர்கள் குடாநாட்டில் இரண்டுவாரங்கள் தங்கியிருந்து மீன்பிடித்துறை சார் பிரதிநிதிகள், கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளனர்.

உள்நாட்டு மீனவர் சங்கப்பிரதிநிதிகள் நொராட் நிறுவன பிரதிநிதிகளை நீரியல் வளத்திணைக்களத்தில் சந்திக்கமுடியுமென யாழ்மாவட்ட கடற்றொழிற் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-6)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(மந்திகை)

சமகால அரசியல் நிலை தொடர்பான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை இரவு 7மணிக்கு தும்பளை திருவள்ளுவர் சனசமூகநிலையத்தில் சனசமூகநிலையத்தின் தலைவர் எஸ்.நடேசன்தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வடமராட்சி அரசியல்துறையை சேர்ந்த தீபன் சேந்தரூபன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (த-23)

● ● ●

(மந்திகை)

இன்றைய அரசியல் நிலை தொடர்பான கருத்தரங்கும் விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் திரைப்படக் காட்சியும் நாளைஇரவு 7மணிக்கு கரணவாய் தெற்கு சனசமூகநிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடமராட்சி அரசியல் துறை பிரமுகர் பொ.வைத்தி உரையாற்றவுள்ளார். (த-23)

## கருத்தரங்கு

யுத்தமா? சமாதானமா, என்றதலைப்பில் பகிரங்க கருத்தரங்கு ஒன்றைஇலங்கை சமாதானப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது-

வத்தளை நகரசபை மண்டபத்தில் நாளை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் சமாதானப்பேரவையின் முக்கியஸ்தரான எஸ்.பாலகிருஷ்ணன் மற்றும் அகிம்சக பெரேரா ஆகியோர் உரையாற்றவுள்ளனர், (த)


# கேள்வி அறிவித்தல்

மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பணிமனைக் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் 09 09.2002ம் திகதி மு.ப 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் மு.ப 10.30 மணிக்கு கேள்வி அறிவித்தல் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலை பெயரும் இடமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|
| யா/ மத்திய கல்லூரி யாழ்ப்பாணம் பாரிய திருத்த வேலை சிமித் கட்டிடம் மேல்மாடி, கீழ்மாடி. | 750.00 | 20,500.00 |

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ஜிசிரிஏடி) நிறுவனத்தின் தரம் எம் 8 பதிவு செய்தவர்கள் இவ்வேலைக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர்.

இவ்வேலைக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட கேள்விப் பணத்தை யாழ் வலயக் கல்வித் திணைக்களத்தில் வலயக்கல்விப் பணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச்செய்யவும்.

02. கேள்விப்பத்திரங்கள் யாவும் 16.08 2002ம் திகதியிலிருந்து 26.08.2002ம் திகதிவரை நண்பகல் 12.00 மணிவரை மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பணிமனை பாடசாலைக் கட்டிடப்பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளவும்.

03. கேள்விப்பத்திரங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியுடன் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதிகளையும் தனித்தனி இரு கடிதஉறைகளில் இடப்பட்டு கடிதஉறைகளின் இடது மேற்பக்கத்தில் வேலையின் விபரமும் எழுதப்படல் வேண்டும்.

தனித்தனியே கடிதஉறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும், பிறிதொரு கடிதஉறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தலைவர், கேள்விச்சபை, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பணிமனை, செம்மணி வீதி, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு யாழ் வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 09.09.2002ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் இடப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எத்தகைய காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

04. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதங்களும், காரணங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆவணங்கள் சரியாக நிரப்பப்படாத சரியாக இணைக்கப்படாத, பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

05. கேள்வி ஆவணங்கள் இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்களையும் பாடசாலைக் கட்டிட வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

06. நடைமுறையிலிருந்த (12½%) ஜி. எஸ். ரி வரிமுறை தற்போது நீக்கப்பட்டுள்ளது. இவற்றுக்குப் பதிலாக புதிய வரிமுறையை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளது புதிய இம்முறை நடைமுறைக்கு வரும்போது ஒப்பந்தகாரரின் கட்டிடவேலை கொடுப்பனவுகளிலும் இம்முறை சேர்த்துக்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பணிமனை,
பாடசாலைக் கட்டிட வேலைப்பகுதி,
செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

ஒப்பம்
திரு. சி. சிவராஜா
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

(கி-4852)

## 3 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு 5 மில்லியன் தேவை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 3 பாடசாலைகளைப்புனரமைப்புச் செய்வதற்கு சுமார் 5 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பான மாநாட்டில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

திரியாய், குச்சவெளி, கல்கிம்பத்தை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளை புனரமைப்பு செய்வதற்கே இந்நிதி தேவைப்படுகிறது.

இதற்கான நிதியினை மிக்கூற் நிறுவனம் வழங்கவுள்ளதாக இம்மாநாட்டில் கலந்துகொண்ட அந் நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து, இப்பகுதி பாடசாலைகளில் முகாமிட்டிருந்த கடற்படையினர் அண்மையில் வெளியேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## முஸ்லிம் வர்த்தகர்கள் யாழ். வணிகர்களுடன் இணைந்துசெயற்படவிருப்பு

(யாழ்ப்பாணம்)

கண்டி முஸ்லிம் வர்த்தகர் சங்க செயலாளர் ஜே ஏ. ஆப்தீன் தலைமையிலான 30பேர் கொண்ட குழு நேற்று முன்தினம் வணிகர் கழகத்திற்கு விஜயம் செய்தது.

தம்மால், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை யாழ். குடாநாட்டில் சந்தைப்படுத்துவது தொடர்பாகஇவர்கள் யாழ். வணிகர்களுடன் ஆராய்ந்தனர்.

அங்கு அவர்கள் தமது முயற்சி தொடர்பாக கருத்துக் கூறுகையில்,

கடந்த காலங்களில் தென் பகுதியில் இருந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் பலர் வருகை தந்து வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து சென்றமையை நாம் அறிவோம்.

ஆனாலும், அவர்களுடன் இணைந்து வர்த்தக நடவடிக்கை மேற்கொள்வதில் மொழி ஒரு தடையாகும்.

எம்முடன் இணைந்து செயலாற்றுவதில் இந்தச் சிக்கல் இல்லை நாம் தமிழ்த் தாய் மைந்தர்கள். (உ-2)

## அரச பணியாளர்களுக்கு கணனிப் பயிற்சிநெறி

### விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

அரச அலுவலர்களுக்கு தொலைக்கல்வியின் கீழ் கணனிப்பயிற்சி வழங்கும் திட்டத்திற்குஅமைய சகல பிரதேச செயலக மற்றும் அரச திணைக்களப் பணியாளர்களிடப்இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பாக யாழ். மாவட்ட தொழில்துறை திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு இணைப்பாளர் ப. ராகவன் அறிவித்துள்ளார். (உ-6)

### பேராதனைப் பல்கலைக்கழக

## நூலகத்துறையினர் 22 இல் யாழ்ப்பாணம் வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்துறையைச் சேர்ந்த சுமார் 50 பேர் எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்திற்குவிஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் பல்கலைக்கழகத்தில்அனைத்துத்தரப்பினர்களுடனும்கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதுடன்குடாநாட்டிலுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்வையிடவுள்ளனர்.

மீண்டும் இவர்கள் 24 ஆம் திகதி இங்கிருந்து திரும்பவுள்ளனர். (ஷ-19)

## யாழ். நூலகத்திற்கு 'மகாவம்சம்' வழங்கப்படும்

(கொழும்பு)

மகாவம்சத்தின் பிரதிகள் யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கு வழங்கப்படவுள்ளன.

மகாவம்சத்தின், விஜயசிறி வெத்தமுனியால் சுருக்கி எழுதப்பட்ட பிரதிகளே யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நூலின் பிரதிகளை கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு வழங்கவுள்ளார். (உ-8)

### வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோத

## கல், மண் அகழ்வை உடன் நிறுத்தக் கோருகிறது அரசியல் துறை

(மந்திகை)

வடமராட்சிப் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் தனியார் காணிகள் மற்றும் பொது இடங்களிலிருந்துமண் கல் என்பனஅகழ்வதைஉடன் நிறுத்துமாறு வடமராட்சிஅரசியல் துறையினர்அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை விடுத்த பத்திரிகை குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இயற்கை எமக்கு அளித்த இம்மண்ணை பணம் என்ற குறுகிய நோக்கத்திற்காக இயற்கைச் சூழலைபாதிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவது பெரும தவறாகும்.

கட்டுப்பாடுகளின்றி எழுந்தமானமாக எந்த இடத்திலும் மணல், கல் அகழவேண்டாம்.

கரவெட்டி தெற்குப் பகுதிகளான தம்பான், கஞ்சாமம், மாது போன்ற பகுதிகளில் சட்ட விரோதமாக மண் அகழப்படுவதாகவும்.

வல்வைப் பகுதியில் கல் அகழ்ந்தெடுக்கப்படுவதாகவும் எமக்கு அப்பகுதி மக்கள் முறையிட்ட வண்ணமுள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கல், மணல் அகழ்வதனால் உப்பு நீர் உட்புகுந்து பயிர்செய்கைகளை பாதிப்பதுடன் நெற்செய்கையிலும் பாதிப்புஏற்படும்நிலை தோன்றியுள்ளது.

எனவே, சட்டவிரோதமாக மண்ணோ கல்லோ அகழ வேண்டாம் அத்தகைய நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கரவெட்டி தெற்கிலுள்ள மாதுவிலிருந்து ரெணி கஞ்சத்து வரை கடல் நீர் உட்புகாவண்ணம்அமைக்கப்பட்ட மண் அணையிலிருந்தும் மண் அகழ்தெடுக்கப்பட்டு உழவு இயந்திரங்கள் மூலம் வடமராட்சி, மற்றும் வலிகாமம் பகுதிக்கும்எடுத்து செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-23)

## அரசாங்க ஊழியர்களுக்கு 24 மாவட்டங்களில் 24 ஆயிரம் வீடுகள்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களும் சொந்தமாக வீடுகளை பெறுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படவிருப்பதன் பிரகாரம் இதற்கென 24 மாவட்டங்களில் 24 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

பொதுநிர்வாக அமைச்சின் மேற்பார்வையில் மலேசிய முதலீட்டாளர்களுடன் கூட்டாக இத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

நடத்தப்பட்ட மதிப்பீடொன்றின்படி அரச ஊழியர்கள்பலர் சொந்தமாக வீடற்றவர்களாக இருக்கின்றனர்.

மலேசியாவின் பொதுப் பணித்துறை அமைச்சர் சாமிவேலு கடந்தவாரம் இலங்கை வந்தபோது பொது நிர்வாகஅமைச்சர் வஜிரா அபயவர்த்தனவுடன் இது பற்றி பேச்சுக்கள நடத்தியிருந்தார்.

இதனடிப்படையில், வீடுகள் 3 தரங்களில் நிர்மாணிக்கப்படும் 5 இலட்சம், ஏழரை இலட்சம், 10 இலட்சம் எனப் பெறுமதி வகைப்படுத்தப்படும் இவற்றை பெறவிரும்பும் அரசஊழியர் முற்பணமாக ஒருதொகையினைச் செலுத்திவிட்டு மீதியை சம்பளத்தில்கழித்துவிடலாம் முழுத்தொகையையும் செலுத்தியும் பெறலாம்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை பொதுநிர்வா அமைச்சு, சுதந்திரசதுக்கம், கொழும்பு—7 என்னும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும். (உ)

## மாபெரும் வர்த்தகக் கண்காட்சி

உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் நுட்பங்களை ஒன்றிணைக்கும்'யுக தக்க-2002' மாபெரும் கண்காட்சி இன்று திருகோணமலையில் ஆரம்பமாகவுள்ளது.

கைத்தொழில் அமைச்சர் ரோஹித போகொல்லாகமவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இடம்பெறவுள்ள இக் கண்காட்சியில் யாழ் குடா நாட்டு காட்சிப் பொருட்களும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## இனிய பொன்மாலைப் பொழுது

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை இந்து இளைஞர் சழகம் நடத்தும் இனிய பொன் மாலைப் பொழுது நிகழ்வு நாளை மாலை இளைஞர் சழகத் தலைவர் செல்வன க. சுரேஸ்குமார் தலைமையில் யூனியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (உ-120)

## தபால்,வாரம்

(கொழும்பு)

சர்வதேச தபால் தினத்தை முன்னிட்டு வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 7 நாட்களை தபால் வாரமாக பிரகடனப் படுத்தமக்கள் தொடர்பாடல் அமைச்சுதீர்மானித்துள்ளது. (உ-5)

## 20 வீதமான ஆசிரியர்கள் நாளாந்தம் விடுமுறையில் செல்வதாகக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாளாந்தம் 20 சதவீதமான ஆசிரியர்கள் கடமைக்குச் சமுக மளிக்காதுவிடுமுறையில் செல்வதாக கல்வி அமைச்சு கூறியுள்ளது.

இதன்காரணமாக குறித்த பாடசாலைகளில்வகுப்புகளை நடத்த சிரமமாக இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விடுமுறை என்பது ஆசிரியர்களின் தொழில்சார் உரிமையானாலும் அவர்கள் தேசத்தின் நலன்கருதி அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென்றுகல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அர்ப்பணிப்புச் சிந்தையுடன் பணிபுரிகின்ற ஆசிரியர்களது தேவைகளைக் கௌரவிப்பது பற்றி தாம் பரிசீலித்து வருவதாகவும்,

ஆசிரியர் மத்தியில் ஒழுக்கத்தை ஏற்படுத்துவதில் அதிபர்களுக்கும் பெரும்பங்கு இருக்கின்றது என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (ஷ)

## க. பொ. த. (உ|த) பரீட்சை பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

க. பொ. த. உயர் தரப் பரீட்சை 2002 பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு விண்ணப்பங்கள கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சைத்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ. எம். ஆர். பி. அமரக்கோன அறிவித்துள்ளார். (உ)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்சழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில்'மீராநாயர்' இயக்கிய **'Monsoon Wedding'** 'மொன்ஸூன் வெடிங்' எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை மு.ப 10.00மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும்கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹா கும்பாபிஷேகம் அடுத்தமாதம் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கான யந்திர பூசைகள் இம்மாதம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. (ஷ)

### மீன்பிடி எல்லை விவகாரம்

## இலங்கை - இந்திய மீனவரிடையே இணக்கம் ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

வடபகுதிக்கடலில் இலங்கை - இந்திய மீனவர்களின் மீன்பிடி எல்லை தொடர்பாக இலங்கை-தமிழ்நாடு மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்தாலோசிக்கவுள்ளனர்.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளை விரைவில் இலங்கை வந்துஇரு நாடுகளுக்கிடையேயான மீன்பிடி எல்லை தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தவுள்ளதாக தமிழ்நாடு பாம்பன் மீனவர் சங்கத்தலைவர் எஸ். அருளானந்தன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சிக் கடல் பகுதியில் பாரிய வள்ளங்கள் மூலம் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள இந்திய மீனவர்கள், வடமராட்சி மீனவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக கடந்த காலங்களில் பல முறைப்பாடுகள் செய்தும், பாதுகாப்புப் பிரிவினர் பாராமுகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

# BOXER

## கண்கவர் தோற்றம், சிக்கனம் மற்றும் உயர் தொழில்நுட்பத்தில் என்றும் முன்னணியில்

இன்றைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள உங்களுக்கான சிறந்த முதலீடு BOXER

நம்பிக்கை மற்றும் தரத்திற்கு பெயர் போன நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்படும் BOXER உங்கள் தெரிவிற்கேற்ற மோட்டார் சைக்கிளாக இருப்பதால் மேலும் சிறந்த வளம் மிக்க எதிர் காலத்திற்கு இதிலே சவாரி செய்யுங்கள்.



- சக்திவாய்ந்த 4ஸ்ட்ரோக் 100CC என்ஜின் . நிலைக்குத்தான அமைவு மேலும் சிறந்த ஓட்டத்துக்கு RACE உயர்தொழில்நுட்பத்துடன்,
- லீட்டருக்கு 87 கி.மீ. நியம - பரீட்சை நிபந்தனைகளின் கீழ்
- கரடு முரடான பாதைப் பயணத்துக்கு உறுதிவாய்ந்த வலுப்படுத்தப்பட்ட டபிள் கிரேமல் அமச்சட்டகம்
- பாதுகாப்பான சவாரிக்கு சக்திவாய்ந்த 35/35W முன் விளக்கு

Boxer இப்பொழுது AT, CT மற்றும் CT Deluxe மாதிரிகளில்.

**பஜாஜ்** பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி

DPMC

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2 தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 687175, 074-700677 ஹொட்லைன் : 074-715050

**விநாயகர்கள்** எஸ். யாசோதரன், ஏ - 16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி : 021-2798
எம்.பி.சி.எஸ் யாழ்ப்பாணம், இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபசி : 021-2587
குறிஞ்சி டிரேடர்ஸ், இல. 6,1ம் மாடி மொடன் மாக்கட் கண்டி வீதி, சாவகச்சேரி. தொலைபேசி : 021-2221

# இன்று ஒரு தகவல்

## பழங்களை உண்ணும் முறை

பழங்கள் என்ற உடனே உயர்ந்த விலை கொடுத்து வாங்குகின்ற பழங்களை நான் கூறவில்லை. அவ்வப்போது நமக்குஎளிதில் கிடைக்சக்கூடிய மா, பலா, வாழை, கொய்யா, கமலா, சீத்தா, பப்பாளி இவைகளும் நமக்கு நன்மை தரும் கனிகளே. விலையுயர்ந்த பழங்களாகிய அப்பிள், திராட்சை, மாதுளை இவைகளில்தான் அதிக சத்துள்ளதென்றும் மலிவான மற்றப் பழங்களில் சத்துப் பொருட்கள் இல்லையென்றும் பலர்நினைக்கிறார்கள். இது தவறான அபிப்பிராயம். அந்தந்தக் காலத்தில் உற்பத்தியாகும் மலிவான பழங்களிலும் நல்ல உயிர்ச்சத்துக்களும், கனிப்பொருள்களும் உண்டு. கடவுள் ஒருவேளை இப்பழங்களை ஏழைகளுக்கென்றே அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறார் போலும்.

நாம் பழங்களை சாதாரணமாக உணவுடன் கலந்தும் அல்லது உணவு உண்ட பின்பும் சாப்பிடுகிறோம். இம்முறை நல்லபலனைத் தராது. பழங்களைத் தனியாகவே சாப்பிடவேண்டும். வேண்டுமென்றால் சில பழங்களைப் பாலுடன் சாப்பிடலாம். ஒரே சமயத்தில் பல தினுசு பழங்களைச் சாப்பிடுவதும் சரியல்ல. சில பழங்கள் மற்றப் பழங்களின் குணத்தை முறிக்கக்கூடும். ஆகையால் காலையில் ஒரு வகையும், மாலையில் ஒரு வகையுமாகச் சாப்பிடுவது நல்லது.

பழச்சாற்றைச் சாப்பிடுவதாயிருந்தால் சாறு பிழிந்த ஐந்து நிமிடத்துக்குள் சாற்றைச் சாப்பிட வேண்டும். இல்லாவிடில் அந்தப் பழச்சாறு கெட்டுப்போகக்கூடும். வெறும் வயிற்றில் பழத்தைச் சாப்பிட்டால் கெடுதல் என்று பலர் நினைக்கிறார்கள். இது தவறான எண்ணம். பழத்தின் முழுப்பலனை அடைய வேண்டுமென்றால் வெறும் வயிற்றில் தான் சாப்பிடவேண்டும். அதாவது அதிகாலையிலும், பகல் சாப்பாட்டிகுப் பிறகும் மூன்று அல்லது நான்கு மணிக்கு அப்பால் சாப்பிடுவதுநல்லது.

நன்றாகப் பழுத்த பழங்களையே சாப்பிட வேண்டும். ஆனால் அதிகமாகப் பழுத்து அழுகிய பழங்களைச் சாப்பிடக் கூடாது. செயற்கையாகப் பழுக்க வைக்கும் பழங்களை விட தாமே பழுக்கும் பழங்கள் மேலானவை, அப்பிள் பழம் சாப்பிடும் போது அதன்மேல்தோலை நீக்காமல சாப்பிட வேண்டும் சிலர் இப்பழங்களைப் பூச்சிகள் தாக்காதவாறு இருக்க மருந்து அடிப்பதால் பழத்தைச் சாப்பிடு முன்சுத்தமாக மேல்பாகத்தைக் கழுவிச் சாப்பிட வேணடும் சிலர் கொய்யாப்பழத்தின் உள்ளிருக்கும் விதைகளையும் அதன்மேல் தோலையும் நீக்கிச்சாப்பிடுகிறார்கள், இப்படி உண்டால் இதன்முழுப்பலன கிடைக்காது. மாதுளம்பழத்தைச்சாப்பிடும் போது அதன் மணிகளில் இருக்கும் கொட்டைகளை நன்றாக மென்று சாப்பிட வேண்டும், அரைகுறையாக மென்று விழுங்கிவிட்டால் அதுஜீரணமாகாது.

விஞ்ஞான முறைப்படி நம் தேக ஆரோக்கியத்திற்கு நாம் தினந்தோறும் குறைந்தது இரண்டு அவுன்சு நிறையுள்ள பழங்களைச் சாப்பிட வேண்டும். விலை யுயர்ந்த பழங்களைச்சாப்பிடவேண்டும்என்ற அவசியம் இல்லை. தினம் இரண்டு வாழைப்பழங்களையும் சில தக்காளிப்பழங்களையும் சாப்பிட்டுவந்தால் கூடப்போதுமானது.

எம்.கே.சபாபதி

# கொழும்புத்துறை மக்கள் தங்கி வாழ இடமின்றித் தவிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையில்மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதி வீடுகளில் படையினர் தொடர்ந்தும் நிலை கொண்டிருப்பதால் மீளக் குடியமரச் செல்லும் மக்கள்ஏமாற்றமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சம்பந்தப்பட்ட மக்கள் தொடர்ந்தும் முகாம்களிலோ அன்றி உறவினர் வீடுகளிலோ தங்கிச் சிரமப்பட வேண்டியுள்ளது.

இவர்களின் வீடுகள் பலவும் கள்வரின் கைவரிசைக்கு இலக்கான நிலையில் கூரை, கதவு ஜன்னல்களற்ற வெறும் கட்டடங்கள் மாத்திரமே எஞ்சியுள்ளதால் குடியிருக்க இடமின்றி மக்கள் அவதியுறுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-262)

# குறவர் குடிகள் குடாநாட்டில் நிலை கொள்வதில் நாட்டம்

(ஈச்சமோட்டை)

போர் அனர்த்தங்களினால் குடாநாட்டை விட்டு வெளியேறிய குறவர் குடிகள் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழல் மற்றும் தரைவழிப் பாதை திறப்பு,என்பவற்றைத் தொடர்ந்து மீளவும் இங்கு நிலை கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இக் குறவர்கள் குடாநாட்டு மக்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துவதில் ஈடுபட்டுள்ளதாக பரவலாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

யாழ்.மத்தியபேருந்து நிலையப் பகுதியில் தாராளமாக உலவும் இவர்கள்அங்குமுடிச்சு மாறுதல் மற்றும் பிச்சை கேட்டு பயணிகளைத் தொந்தரவுக்குள்ளாக்குதல் பிச்சையிடாதபட்சத்தில் பொதுமக்களை துர்வார்த்தைகளால்ஏசி அவஸ்தைக் குள்ளாக்குதல், ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர்.

தவிரவும், கலாசாரச் சீர்கேடான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் சமூக நலன் ஆர்வலர்கள் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர். (உ-59)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்-பொற்பதி ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத் தேர் கைலாசவாகன வெள்ளோட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இணுவில் காயத்திரிபீடத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

சிற்பாசாரியர்களான சீ.ஜெயப்பிரகாஷ், ஆ. சிவலிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஷ)

## மனநலம் குன்றியவர் அட்டகாசம்

(ஈச்சமோட்டை)

சுண்டுக்குளி மறவர்குளம் பகுதியில் மனநலம் குன்றிய மனிதர் ஒருவரின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இவர் சில நாட்களாக கடும் கோபத்துடனும், துர்வார்த்தைப் பிரயோகம் மற்றும் கூச்சல் போட்டு பெரும் அட்டகாசம் புரிந்து வருகின்றார்.

அத்துடன் அப்பகுதி வாசிகசாலைப் பத்திரிகைகளைக் கிழித்தெறிவதோடு, கைகளில் கற்களுடன் அலையும் இவரைக் கண்டு சிறுவர்களும் பெண்களும் பெரும் பீதியடைந்து வருகின்றனர். (உ-59)

## ஹொக்கிச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜெகதீஸ்வரி சிவலோகநாதன் நினைவாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 வது ஆண்டு விழாச்சபை நடத்தும் 9 பேர் கொண்ட யாழ். மாவட்ட ரீதியிலான ஹொக்கிச் சுற்றுப்போட்டி நாளையும் நாளைமறுதினமும்கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 7. 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக (கோல்ட்) அணி எதிர் நைன் ஸ்ரார் வி.க,

காலை 8 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகம (புளஸ்) அணி எதிர் உடற் கல்வி (பி) அணி,

காலை 9.15 மணிக்கு சென்றலைட் வி.க எதிர் மனோகரா வி.க (வடமராட்சி,

காலை 10.00 மணிக்கு கோப்பாய் வி.க எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆகியன மோதவுள்ளன. (உ-3)

## கடற்படைத் தளபதியின் பதவி நீடிப்பால் ஆறு அட்மிரல்களுக்கு பாதிப்பு

(கொழும்பு)

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரிக்கு ஜனாதிபதி 3 ஆண்டுகள் சேவைநீடிப்பை வழங்கியுள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி என்றவகையிலும் முப்படையின் பிரதம தளபதி என்ற வகையிலும்தான் இந்த சேவைநீடிப்பை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இப்பதவி நீடிப்பால் 6 றியர் அட்மிரல்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறுமாறு நிர்ப்பந்திக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஒருறியர் அட்மிரலாக உள்ளவர் பதவிஉயர்வு பெறவில்லையானால் 3 ஆண்டுகளில் ஓய்வுபெறவேண்டும். வழமையில் ஒரு தளபதிக்கு 6 மாதங்களே சேவைநீடிப்பு வழங்கப்படுவதுண்டு. விசேட சந்தர்ப்பங்களில் ஒரு வருடம் வழங்கப்படுகிறது. (உ)

## பனம்பொருள் கைப்பணி உற்பத்தி நிலையங்கள் பரவலாக அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பனை அபிவிருத்திச் சபையினால் அளவெட்டி, நவாலிப் பகுதிகளில் பனம்பொருள் கைப்பணி உற்பத்திப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

பனை வளத்தை நம்பி வாழும் குடும்ப அங்கத்தவர்களுக்கு இப் பயிற்சியைப் பயில முன்னுரிமையளிக்கப்படவுள்ளதுடன், 120 பேருக்கு பயிற்சியளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மையில் இதுபோன்றதொரு பயிற்சி நிலையம் அரியாலையில் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

## திருக்குறள் மனனப் போட்டி

(கொழும்புத்துறை)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ஸ்தாபகர் மழவராயர் கந்தையா நினைவாக மாவட்ட மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே திருக்குறள் மனனப் போட்டி நடத்தப்படவுள்ளது. (உ-262)

## மின் விநியோகம் இல்லை

(ஈச்சமோட்டை)

அராலிப் பகுதிக்கு இன்னமும் மின் விநியோகிக்காமை குறித்து அப்பகுதி மக்கள் மிகுந்த அதிருப்தியடைந்துள்ளனர்.

இப்பகுதிக்கு மின் விநியோகிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முன் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-59)

## தப்பிச்சென்ற கைதி அகப்பட்டார்

(புத்தளம்)

கடந்த வியாழக்கிழமை புத்தளம் சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்ற கைதிகளில் ஒருவரை வென்னப்புவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் கொடுத்த வாக்குமூலத்தின் மூலம் புதிய பல தகவல்கள் வெளியாகியுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதிகள் தப்பிச்செல்ல சிறைக்காவலர்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் புதிய தகவல் வெளியாகியுள்ளது. (உ)

## விபத்தில் ஆசிரியர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்தவரான யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் வி. தயாபாலன் (வயது 34) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ 6)

## சமாதான நீதிவான்கள் 24 இல் யாழ்.வருகின்றனர்

(கொழும்பு)

இலங்கையின சமாதான நீதிவான்கள் சங்க 50 உறுப்பினர்கள் அடங்கிய குழு, எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இங்கு வரும் இக்குழு அரச அதிபர் மற்றும் பிரதேச சமாதான நீதிவான்களையும் சந்திக்கவுள்ளது.

அத்துடன்,யாழ் நாகதீப விகாரைக்கு சமயக் கடமைகளுக்காக இக் குழுவினர் செல்லவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

## யாழ். மாநகரசபை அம்புலன்ஸ் சேவை இனி இரவில் இல்லை

(யாழ்ப்பாணம)

யாழ். மாநகர சபையின் அம்புலன்ஸ் சேவை இனி வரும் காலங்களில் பகலில் மட்டுமே இடம்பெறவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அறிவித்துள்ளன. மேற்படி நடைமுறை நேற்றைய தினம் அமுலுக்கு வந்துள்ளது.

தற்பொழுது மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இரவு வேளைகளிலும் தாராள வாகன வசதி காணப்படுவதாகவும் ஊரடங்குச் சட்டத்தில் தளர்வு காணப்படுவதாலும் மாநகர சபையின் அம்புலன்ஸ் சேவையைப் பெறும் மக்களின் தொகை குறைந்து வருகின்றது.

இதனாலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாகவும், இனிவரும்காலங்களில் காலை 8.00 மணிமுதல்மாலை 5.00 மணிவரையுமே அம்புலன்ஸ் சேவையிலீடுபடுமெனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-19)

## நோயாளர் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மத்திய மருந்தகத்திற்கு பதில் வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமையால், அங்கு செல்லும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர்.

மேற்படி மருந்தக நிரந்தர வைத்தியர் சுகவீன லீவில் நிற்பதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மேற்படி நோயாளர்கள் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையை நாடி வருகின்றனர் (உ)

### நிர்வாகசபை
## தெரிவு

(யாழ்ப்பாணம்)

வண்ணை கோம்பயன் மணல் இந்து மயான பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது தலைவராக கலாநிதிகே குணராஜா, செயலாளராக இரா. செல்வவடிவேல், பொருளாளராக க.தம்பிராசா ஆகியோரும் 15 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

### இரத்தினக்கல்
## கைத்தொழில்
### இணையத்தளம

(கொழும்பு)

உள்ளூர் இரத்தினக்கல் ஆபரணக்கைத் தொழில் சார்ந்த இணையத்தளமொன்றை ஏற்றுமதி அபிவிருத்திசபை ஆரம்பிக்க விருக்கின்றது.

இந்த த்துறையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்குப் புதிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் இதன் நோக்கமாகும்.

உள்ளூர் வர்த்தகர் பாவனையாளர் மட்டுமன்றி வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களையும் இலக்காகக் கொண்டு இவ் இணையத்தளம் அமைக்கப் படவிருக்கின்றது. (ஷ)

## இராசி பலன்

(16-8-2002)
(ஆடி 31, வெள்ளி)
அட்டமி காலை 7.24 வரை
அனுசம் பி இ 3 58 வரை
ராகுகாலம் - 10 35 – 12 05
நல்லநேரம் - 6 05 - 7.35
வரலட்சுமி விரதம்

**மேடம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், உடல் வியாதி, வாகன பயம்.

**இடபம்**
பிரயாண நன்மை, அபூர்வ சந்திப்பு, முயற்சி கைகூடும், தனலாபம்.

**மிதுனம்**
உடல் நலம், தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம், சந்தோசம்.

**கடகம்**
பிரயாணம், வியாபார சிறப்பு, புத்திரரால் கவலை, மனச் சோர்வு.

**சிங்கம்**
ரோகபயம், முயற்சி தாமதம், அபகீர்த்தி, சயனசுகக் குறைவு.

**கன்னி**
அன்னியர் சந்திப்பு, தனவரவு, வாக்குப் பலிதம், காரிய நன்மை.

**துலாம்**
கௌரவக் குறைவு, நிலை மாற்றம், வீண் விவாதம், காரியதாமதம்.

**விருச்சிகம்**
ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, ஜனவசியம், முயற்சி கைகூடும்.

**தனுசு**
உணர்ச்சி வசப்படல், நண்பர்கள் வெறுப்பு, வேலைக் கஷ்டம், முயற்சி தாமதம்.

**மகரம்**
குடும்ப நன்மை, தெய்வ தரிசனம், பெருமையடைதல், காரிய நன்மை.

**கும்பம்**
செய் தொழில் விருத்தி, முயற்சி நிறைவேறும், உற்சாகம், நல்ல நிழ்வு

**மீனம்**
ஆன்றோர் மதிப்பு, புதிய திட்டமிடல், முயற்சி தாமதம், அச்சமான நிலை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

### கொழும்பில் ஏற்பட்டுள்ள போதைப் பொருள்
# தட்டுப்பாட்டால் பாவனையாளர் மனவிரக்தி; தற்கொலை, குற்றச் செயல்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

போதைப் பொருள் தட்டுப்பாடு காரணமாக தற்கொலைகள் அதிகரிக்கின்றதாக கண்டறியப்பட்டுள்ளது.

ஹெரோயின் மற்றும் போதைப் பொருட்களுக்கு கடந்த சில வாரங்களாக கொழும்பு மாநகரப்பகுதிகளில் தட்டுப்பாடு நிலவுகின்றது

இதனால் குற்றச்செயல்களும், தற்கொலைகளும் அதிகரித்துள்ளன.

தினமும் தற்கொலைகள் இதன் காரணமாகநடைபெறுவதாக நகரின் நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் 9 ஆம் திகதி போதைப்பொருள் பாவனையாளர் ஒருவர் மருதானையிலுள்ள ரயில்வே பாலத்தின் மீது ஏறிநின்று தண்டவாளத்தில குதித்துள்ளார்.

தற்கொலை செய்ய முற்பட்ட மற்றுமோர் இளைஞர் ஒருவரை மருதானை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்து வைத்த போது தனது காற்சட்டையைக் கயிறாகப்பாவித்துசுருக்கிட்டுதற்கொலை செய்துகொண்டார்.

மற்றுமொருவர் ஞாயிறன்று போதைப்பொருள் தேடியும கிடைக்காத விரக்தியில்கொம்பனி வீதி ரயில் தண்டவாளத்தில் படுத்து உயிரைமாய்த்துக் கொண்டார்.

காலிமுக கடற் கரையில் போதைப்பாவனைக்கு அடிமையான இளைஞர் ஒருவரின் சடலம் கடற்படையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது

திங்களன்று 3 பிள்ளைகளின் தந்தையாரான 54 வயது போதைபாவனையாளர் சலவைச் சோடாவை சாப்பிட்டதில் மரணமடைந்துள்ளார்.

கொழும்பின் பொலிஸ்நிலையங்களில் திருட்டுகள், வழிப்பறிகள், கொள்ளைகள், பெண்களிடமிருந்து தங்க ஆபரணங்களை பிடுங்கி எடுத்தல் ஆகியனதிடீரென அதிகரித்துள்ளன. அண்மையில் போதைப்பொருள் வியாபாரத்திலீடுபட்டுள்ள பாதாள உலகத்தவர்களுக்கிடையே பூசல்கள் வலுத்து கொலைகள்பல நடைபெற்றதன் விளைவாகவே திடீரென போதைப்பொருள் தட்டுப்பாடுஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ)

# வட-கிழக்கு உள்ளூராட்சி மன்ற தேர்தல் தினத்தில் மாற்றமில்லை
### பிரதித் தேர்தல் ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குமாகாணங்களில்தேர்தல்நடைபெறாத53 உள்ளூராட்சிமன்றங்களுக்கு புதிதாக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டுமானால் பாராளுமன்றத்தில் விசேட சட்ட மூலம் ஒன்று நிறை வேற்றப்பட வேண்டுமென்று தேர்தல் திணைக்களத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கென முன்னர் தாக்கல் செய்யப்பட்டமனுக்கள்ரத்து செய்யப்பட்டு புதிதாக தாக்கல் செய்யப்பட வேண்டுமென்று தேசிய ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா அண்மையில் கருத்து தெரிவித்திருந்தமை குறித்து பதிலளிக்கும் போதே இவ்வாறு கூறப்பட்டது.

இதேவேளை வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டவாறு எதிர்வரும் செப்ரெம்பர் 25 ஆம் திகதி வடக்குக் கிழக்கில் 53 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறும் என்றும் அதற்கான சகல ஏற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதித் தேர்தல் ஆணையாளர் ஏ பி. அருந்தவச் செல்வம் தெரிவித்துள்ளார். (உ-5)

### தெய்வீக இசையரங்கில்
## இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில் நான்காம் நாளான இன்று துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிவஸ்ரீ சோ. உமாரமண சர்மாவின் பாட்டுக் கச்சேரி பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது .(உ)

### கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை காலை 8 30 மணிக்கு ஜெமினியன்ஸ் வி க. எதிர் கே. சி. சி. சி. வி. க. பி. ப. 1.00 மணிக்கு யங்ஸ்ரார் (பச்சை) வி. க. எதிர் ஜொலிஸ்ரார் வி. க. ஆகியன மோதவுள்ளன. (உ-3)

### ஆயுத பாவனை தந்த பரிசு
# ஆப்கானில் இருந்து இலங்கை வரை கேடு தரும் நச்சு வாயு மேகம்

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானிலிருந்து இலங்கை வரையான பிரதேசத்தின் மேலாக நச்சு வாயு மேகம் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

பொருட்கள் எரியும் போதும் குண்டு வெடிப்புகளின் போதும் வெளியேறும் புகை, கரி, அமிலங்கள், நச்சு வாயுக்கள் இந்த மேகத்தில் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

தெற்காசியப் பிராந்தியத்தின் மீது காணப்படும் இந்த நச்சு வாயு மேகத்தினால் கோடிக் கணக்கான ஏனைய பிராந்தியங்களின் மக்களின் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நச்சு மேகம், காட்டுத் தீ, மற்றும் விவசாயக் கழிவுகளை வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்கள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்கள், அணு ஆயுதப் பரிசோதனைகள் ஆகியவற்றினால் உருவானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மேகம் 3 கிலோமீற்றர் தடிப்புக் கொண்டது.

இதனால் பயிர்ச்செய்கை, மழைவீழ்ச்சி ஆகியவற்றில் பாதிப்பும் ஒழுங்கின்மையும் ஏற்படுவதுடன் வரட்சியும், பாரிய வெள்ளப் பெருக்கும் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

அத்துடன், இப் பிரதேச மக்களின் பொருளாதாரம், சுகாதாரம் என்பன பாதிக்கப்படவும் இந் நச்சு வாயு மேகம் காலாகிறது.

இத்தகைய நச்சு வாயு மேகங்கள் உருவாவதை தடுப்பதற்கும், நச்சு மேகத்தை அகற்றுவதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமும் ஏனைய அரசாங்க சார்பற்ற அமைப்புகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ'3)

# பேச்சுவார்த்தை மூலமே சமாதானம் ஏற்படும்
### குடாநாட்டு மக்கள் கருத்து

(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலமே சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்பதில் யாழ். குடாநாட்டு மக்கள் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் யாழ். குடாநாட்டில் நல்லூர், வலிகாமம் பிரதேசங்களில் வசிக்கும் சுமார் 300 பேரிடம் மேற்கொண்ட கருத்துக் கணிப்பின் போது மேற்கண்டவாறு பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவ்வாண்டு ஜூலை 22 முதல் 25 வரை நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில்,

விரைவில சமாதானம் ஏற்படும் எனவும, தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் எனவும் பலர் குறித்து வெளியிட்டுள்ளனர் (உ)

### மட்டக்களப்பில்
# சமுர்த்தி நிவாரண வெட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச செயலகம் முன்பாக நேற்று முன்தினம் சமுர்த்தி நிவாரண வெட்டைக்கண்டித்து ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பித்த இவ் ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தமையினால் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மட்டக் களப்புகிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் அல்கா ஹ்ராபிக் மஜித்தலைமையில் ஆயிரம் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்ட முடிவில் பிரதேச செயலக அதிகாரிகளிடம் ஜனாதிபதி, பிரதமர், சமுர்த்தி அமைச்சர் ஆகியோருக்குமுகவரி இடப்பட்ட மனுக்கள் கையளிக்கப்பட்டன.

நாட்டின் ஏனைய மாகாணங்களில் 25 சதவீதசமுர்த்தி நிவாரண வெட்டை அரசு அமுல் படுத்தியுள்ள அதே நேரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 35 சதவீத நிவாரண வெட்டு அமுல் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ஷ)

### ப. நோ. கூ- சங்க
## பணிகள் விஸ்தரிப்பு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதியில உள்ள பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் செயற்பாடுகள விஸ்தரிக்கப்பட்டுவருகின்றன.

பெருந்தொகையான மக்கள் மீளக்குடியமர்ந்ததை தொடர்ந்தும், வன்னியில் இயங்கிவந்த ப. நோ. கூ. சங்கங்கள் இங்கு ஏற்கனவே இயங்கிக்கொண்டிருந்த சங்கங்களுடன் இணைந்ததை அடுத்தும் சங்கச் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணியில் வேலணை, ஊர்காவற்றுறைப் பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்கள ஈடுபட்டுவருகின்றன.

மேற்படி சங்கங்களினால் பேக்கரி நடத்தப்படவுள்ளதுடன் மக்கள கடைகளைத திறப்பதற்குரிய வேலைகள இடம்பெற்றுவருகின்றன. (உ-75)

### முஸ்லிம்
## பா. உ. க்கள்
### பிரதமருக்கு மகஜர்

(புத்தளம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள இணைந்து வடக்கும, கிழக்கும இணைந்த நிர்வாக சபையில், முஸ்லிமகளின் அரசியல் இருப்புக்களை பேண, முஸ்லிம்களுக்கான தனியான இடைக்கால நிர்வாக சபையொன்றை ஏற்படுத்தித்தருமாறு ஷ்கரி அமைச்சரும், முஸ்லிம காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் ஊடாக, பிரதமருக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல பாராளுமன்றத்தில் வைத்து அம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ. ல. மு. காங்கிரஸின் 9 பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கையெழுத்திட்டுள்ளனர். (உ)



செல்லையா மெற்றாஸ்மயில் தொகுத்த ''மரபுவழி இசைநாடகங்கள் ஒன்பது'' நூல் அறிமுக விழா அண்மையில் வவுனியா சுத்தானந்த இளைஞர் சங்கத்தில் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடை பெற்றது. இதில் முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார், வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. விசாகலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் நூலாசிரியர் அமர்ந்திருப் பதையும் படங்களில் காணலாம்.



அண்மையில் யாழ். மத்திய கல்லூரியில் நடந்த வர்த்தக கண் காட்சியில் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்தினால் ACTION நிறுவனத்தின் உதவியுடன் உற்பத்தி செய்யப்படும் ஐசுபி பழரச உற்பத்திகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதையும் சங்கத் தலை வர் குமாரவேல் அவற்றைப் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம்.



யாழ். வர்த்தகக் கண்காட்சியில் பனை அபிவிருத்திச் சபை தனது உற்பத்திப் பொருட்களை பார்வைக்கு வைத்திருப்பதைக் காணலாம்.



வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக முன்றலில் சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்த மாணவிக்கு நெல்லியடி மக்கள் வங்கிக் கிளை முகாமை யாளர் திருமதி M.A.S. சிவலிங்கம் சேமிப்புப் புத்தகத்தினையும் பரிசிலையும் வழங்கும் காட்சி.



சன்மார்க்க மகா வித்தியாலய அதிபர் பரிசில் வழங்கும் காட்சி

திருமலைக் கடலுக்குச் சென்ற

## நான்கு மீனவர்கள் கரை திரும்பவில்லை

(சுண்டுக்குளி)

திருகோணமலையில் கடந்த 8ம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற 4பேர் இதுவரை கரைக் குத் திரும்பவில்லை என்று தெரி விக்கப்படுகிறது.

30 அடி நீளமான வெள்ளை நிறமுடைய படகிலே இவர்கள் கடலுக்குச் சென்றதாக தெரிவிக் கப்படுகிறது.

## கசிப்புவிற்ற 7பேருக்கு ரூ.22ஆயிரம் தண்டம்

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக கசிப்பு விற்பனை செய்த 7பேர் நேற்று முன்தினம் பொலிசாரால் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

இவர்களை விசாரணை செய்த யாழ். மாவட்ட மேலதீக நீதிபதி திருமதி எஸ். இளங்கோவன் இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து குற்றப் பணமாக 22ஆயிரம் ரூபாவை செலுத்தும்படி உத்தரவிட்டார்.

## நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதிக்கப்படும்

(கொழும்பு)

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக் கையில்லாத் தீர்மானம் விவாதத் திற்கு எடுத்துக் கொள்ளப்பட வுள்ளது.

எதிர்க் கட்சிகளினால், சமர்ப் பிக்கப்பட்டுள்ள இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம் எதிர்வரும் திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது. (த)

## பிணைதிருத்த சட்டமூலம் அர்த்தமற்றது

(கொழும்பு)


பயங்கரவாதத் தடைச்சட் டத்தை நீக்காது பிணைத் திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத் துவது அர்த்தமற்ற ஒரு செயலா கும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப் பினர் இரா. சம்பந்தன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள் ளார்.

பயங்கரவாதச் தடைச் சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகளின் எண் ணிக்கையை சபையில் சமர்ப் பித்து கருத்து வெளியிட்டபோதே இதனை அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதச் தடைச் சட்டம் ரத்து செய்யப்படவேண்டும் என் றும் பயங்கரவாத தடைச் சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்டவர் களில் 90 சதவீதமானவர்கள் தமிழர்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

(ந-5)

## நல்லூரான் திருவடிக்கு~04



### விக்கினம் தீருமே!

நாட்டிலே நல்லவை நடக்குமே பாரீர்,
நல்லூர் முருகனின் திருவிழாக் காணீர்,
வீட்டிலே முருகனின் திருப்புகழ் பாடீர்,
விக்கினம் இன்றுமுதல் விலகுமே உணர்வீர்

- கே. எஸ். சிவஞானராஜா -

### அழகு மிகு திருவிழா!

ஏறுமயில் முருகனுக்கு எடுக்கின்ற திருவிழா
ஆறுதலை பத்தருக்கு தருகின்ற திருவிழா
மாறுபடும் உளங்களையும் ஒன்றாக்கும் திருவிழா
ஆறுமுகன் வலம்கொள்ளும் அழகுமிகு திருவிழா

- வேலணபாலா -

### பீடுதா கந்தா!

நல்லூரின் தேரடியில் நல்ல மருந்திருக்க
எல்லோர்க்கும் தீர்க்கும் பிணி என்றார் - பொல்லாப்பு
ஏதுமற்ற பொக்கிஷம் எப்படியோ அப்படியே
பேதமற்றத் தாகந்தா பீடு

- நயினைச்சோதி -

### வந்தனை கந்தனை நோக்கி!

சிந்தனை செய்திடும் எந்தன் மனமே . . .
கந்தனை வந்தனை செய்திடும் தினமே!
நிந்தனை செய்திடும் எண்ணங்கள் நீக்கி!
வந்தனை செய்திடும் கந்தனை நோக்கி!

- வதிரி த. அஜந்தகுமார் -

### உன் அழகில் மூவினமும்!

கருணை வடிவமைந்த கந்தா
கலையின் உருவெடுத்த வேலா
உருகும் மனது கண்டு உடனே
உதிக்கும் நிலவெனவே அருள்வாய்
அருகில் நீயிருக்கும் துணிவால்
அவலம் மறையுதெ

- செ. பவானி -

### நல்லையை நாடு நெஞ்சே!

நல்லை நகர்நாடி நல்ல அருள் வேண்டிச்
செல்ல வேண்டும் நீ என்மனமே!
தொல்லை தாங்காது துவளும் நிலைமாற்ற
வல்ல வேலவனைத் தொழுமனமே!

அல்லல் செய்திட்ட ஆரன்தனை வதைத்த
செல்வன் தனை என்றும் நினை மனமே!
இல்லைக் குறையேதும் என்னும் விதமாக
தில்லைச் சிவனாரின் மைந்தன்
அருள்வானே!

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன் -

### வரந்தா இனிது வாழ

எங்கள் துயர் தீரும் நாள் என்றோ வென்று ஏங்கி
இருந்திட்டோம் இனிப்பொறோம்
பெரங்குதமிழ் ஓசை ஏழ் உலகும் செல்ல
புதரிடையே மறைகின்ற நரிகள் போல
எங்கெங்கோ ஓடி விட்டார் ஈனர் எல்லாம்
இருந்தும் இனிப் பயன் ஏதும் இல்லையென்று
வங்கமலி கடல் புடைசூழ் ஈழ நல்லூர் வளர் கந்தா
வடிவழகா வரந்தா இனிது வாழ

- நயினை திருமுருகமாமணி-

### வண்ணமயில் ஏறிவா!

நல்லைநகர் தனிலுறை வேலவா
நாடிவரும் அடியவர்தம் காவலா
அல்லல்போக்கி எம்மினத்தை ஆளவா
அமைதிகாண இனப்பகைமை வீழவா
எல்லையற்ற இன்னலோடு வாழவோ
ஏதிலியாய் எந்தநாடும் இகழவே
வல்லைமைந்தன் தலைமையிலே விடிவுதா
வணங்கிநின்றோம் மயில் தனில் ஏறிவா!

- நயினை இராகுலன் -

# ஈராக்கில் ஆயுதத் தொழிற்சாலை

## அமெரிக்க புலனாய்வில் கண்டறிவு

(பக்தாத்)

ஈராக்கில் வெவ்வேறு வகையான ஆயுததயாரிப்புதொழிற்சாலை ஒன்றினை அமெரிக்க புலனாய்வு பிரிவினர் கடந்த வாரம் கண்டுபிடித்துள்ளதாக வாஷிங்டனில் இருந்து வெளிவரும் 'வாஷிங்டன் ரைம்ஸ்' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது

அமெரிக்காவின் உளவு செய்தி மூலம் இந்த தகவல் வெளிவந்துள்ளதாக அப்பத்திரிகையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது

ஈராக்கின் தலைநகரான பக்தாத்திற்கு வடமேற்கில் 6 மைல் தொலைவில் இந்த தொழிற்சாலை அமைந்திருப்பதாக அமெரிக்கபுலனாய்வுப் பிரிவினரை மேற்கோள் காட்டி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தொழிற்சாலையை அண்டிய பகுதிகளில் ஏறக்குறைய 60 டிரக் வண்டிகள் உள்ளேயும் வெளியேயுமான போக்குவரத்துக்களில் ஈடுபட்டிருந்ததாகவும், 85 ஊழியர்கள் இதில் பணிபாற்றி வருவதாகவும், ''எபனோ'' நோயை உருவாக்கக் கூடிய வைரஸ்களும் இத் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டு வருவதாகவும் வாஷிங்டன் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது

(உ-8)

# மட்டக்களப்பு மீனவர்கள் இன்று கண்டனப் பேரணி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இன்று காலை9.00 மணிக்கு கண்டனப் பேரணி ஒன்று இடம் பெறவுள்ளது.

மீனவர்சமூகத்திற்கு இழைக்கப்படும் அநீதிகள், கடற்படையினால் அடிக்கடி நடத்தப்படும் தாக்குதல்கள் உட்பட அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்பவற்றுக்கு அரசுநடவடிக்கைஎடுக்க வேண்டுமென்று கோரியே இக்கண்டனப் பேரணி இடம் பெறவுள்ளது.

மட்டக்களப்புஇந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்து காந்திசதுக்கத்தில்இப்பேரணி முடிவடையும்,

முடிவில் கடல் தொழில் அமைச்சருக்கான மனு ஒன்று மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்படும்.

(ஷ)

# ஈராக் மீது மற்றுமோர் தாக்குதல்

## முஸ்தீபுகளில் அமெரிக்கா முனைப்பு

(லண்டன்)

செங்கடலுக்கு ஹெலிகளையும், வெடி மருந்துகளையும் அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

இவற்றைக் கொண்டு செல்லக்கூடிய பாரிய கப்பலை வாடகைக்கு அமர்த்தவும் அமெரிக்கா முயற்சித்து வருகிறது.

இதேவேளை ஐரோப்பாவிலிருந்து யுத்த தாங்கிகள், சவச வாகனங்களை மத்திய கிழக்கிற்கு கொண்டு செல்வது தொடர்பாக கப்பல் நிறுவனம் ஒன்றிற்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து கொண்டு செல்லப்படவுள்ள ஹெலிகள் சவூதி அரேபியா அல்லது யெமனில் இறக்கப் படலாம் என கப்பல் தரகர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈராக் மீதான தாக்குதலுக்கான முஸ்தீபுகளே இவை என அவதானிகள் தெரிவித்துள்ளனர்

(உ-3)

# தமிழீழவிடுதலைப் புலிகளின் காரைநகர் அரசியல் பணிமனைநேற்று திறப்பு

(காரைநகர்)

காரைநகர் அரசியல் பணிமனை நேற்று ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே எக்ஸ் செல்வநாயகத்தினால் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

ஊச்சுடரை மாவீரர் சூரிய குமாரின் தாயார்ஏற்றிவைக்க புலிகளின் தேசியக்கொடியை தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகர் ஐபாஅண்ணை ஏற்றிவைத்தார்.

இப்பணிமனையின் பெயர்ப் பலகையை தீவகவலய கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

பின்னர் காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் அ. சிற்றம்பலம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது, தீவக வலய கல்விப்பணிப்பாளர், ஊர்காவற்றுறை பிரதேச செயலர், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

புலிகளின் கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை ரத்தினதுரை, யாழ். அரசியல் பிரிவு பிரமுகர் பாப்பா,தீவக அரசியல் பிரிவு பொறுப்பாளர் செம்மணன் உட்பட போராளிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் புலிகளின் 8 ஆவது அரசியல்அலுவலகம் இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-246)

# பிரம்படிச் சட்டத்திற்கு சர்வதேச மன்னிப்புச் சபை பலத்த கண்டனம்

(கோலாலம்பூர்)

சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு பிரம்படி வழங்கும் மலேஷியாவின் புதிய சட்டத்தை சர்வதேச மன்னிப்புச்சபை கண்டித்துள்ளது.

இவ்வாறு பிரம்பால் அடிப்பது குரூரமானதென சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

பிரம்படி மூலம் தண்டனை வழங்குவதற்கு மலேஷியாவின் புதிய குடிவரவு சட்டம் வழி செய்கிறது.

புதிய சட்டப்படி சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு 6 மாத சிறையும் 6 பிரம்படியும் வழங்கப்பட்டு வருகிறது

சட்டவிரோதமாக அங்கு குடியமர்ந்து சுமார் 3 லட்சம் பேர் ஒகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட மன்னிப்புக் காலத்தில் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## நீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில்குடிநீர் வசதி குறைந்த அரியாலை ஆனைக்கோட்டைப் பகுதிகளுக்கு தண்ணீர் பௌசர் மூலம் நீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சேவை அடிப்படையில் சொற்ப கட்டணத்துடன் இந் நீர் விநியோகப் பணி இடம் பெறவுள்ளதாகபிரதேச சபையின் செயலாளர் செ.செல்வரத்தினம் தெரிவித்தார்.

(உ-19)

## இசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம், கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

கானகதாவாரிதி கொக்குவில் பிரம்மஸ்ரீசிவ.வை.நித்தியானந்தசர்மா உற்சவ காலத்தில் 'மகாபாரதம்' பற்றி தொடர் இசைப் பேருரைநிகழ்த்தி வருகிறார்.

(உ)

## சிந்தனைச்...

என்று நான் எண்ணுவதுண்டு ''சிலவிதைகளை ஒருகாலத்தில் முளைகொள்ளலாம் என்று எறிந்து விடுவதுண்டு என்று ஒருநாள் சொன்னார். அதனால் விளங்காதவைகளையும் ஒதுக்காமல்எழுதியதுண்டு. அவர் தொடாத துறைகளே இல்லை.'' இவ்வளவும் தெரிகிறது ''என்று சொல்லுவார். பின்பு சில தினங்களின் பின்'' அப்பாலும் தெரிகிறது என்று சொல்வதுண்டு. எப்படித் தெரிகிறது என்பதை ஆர் அறிவார்.''

'சிந்தனைச் செல்வர் பொ கைலாசபதிஆளுமையும் ஆக்கமும்' என்றஇந்தநூலிலே வந்துள்ள சட்டுரைப் பகுதிகள் பண்டிதமணி பற்றியவற்றைப் பெரும்பாலும்உரைத்து இடைப்பிற வரலாகப் பொ. கை. பற்றியும் குறிப்பிடுவதிலிருந்து ஓர்உண்மையைப் பேராசிரியர் சு. சுசீந்திரராஜா எடுத்துக் காட்டுவது இவ்விடத்திற்குப்பொருந்தும் என்பதால் அதைக் குறிப்பிடுவதோடு அமைகிறேன்.

'தருமம் என்றுஒருபொருள் உளது என்ற அடிப்படையில் சமயத்தை அணுகிய பண்டிதமணி பற்றி ஆராய்வோர் உபஅதிபர் கைலாசபதியை மறத்தல் அரிது. இதே போன்று கைலாசபதியை அறியவிரும்புவோர் பண்டிதமணியை விட்டு விடுதல் அரிது இருவர் பற்றிய சிந்தனை தழைப்பதாக'

- பண்டிதமணியும் உபஅதிபர் கைலாசபதியும், மேலது ப.23

(முற்றும்)

குடாநாட்டு கடல் தொழிலை வளம்படுத்த

# வேண்டிய உபகரணங்களை வழங்க பிறோம்ஸ் நிறுவனம் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடல் றொழிலை மேம்படுத்தத் தேவையான இயந்திர உதவிகளை வழங்க தென்பகுதி பிறோம்ஸ் நிறுவனம் முன் வந்துள்ளது.

மேற்படி நிறுவன விற்பனைப் பொறியியலாளர் எஸ் எஸ். ஜெயதிலக, உற்பத்தி அதிகாரி ரஞ்சனாஅபயகுணதிலக, களஞ்சியப் பாதுகாவலர் சமிந்தவிஜயரத்தின, எஸ் இ. டப்பிறேரா ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்றைய தினம் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாச அலுவலகத்திற்குவிஜயம் செய்து கலந்துரையாடல் ஒன்றினை நடத்தினர்.

யாழ். குடாநாட்டு மீனவர்கள் சார்பில் சமாசத் தலைவர் எஸ் தவரட்ணம் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக் கலந்துரையாடலில் மேற்கண்ட உதவி வழங்குவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டது.

குடாக்கடலில் மீன்பிடிப்பதற்குத் தேவையான பாரிய படகு இயந்திரங்களை விற்பனை செய்வது,

உள் இணைப்பு இழுவை இயந்திரங்களை விற்பனை செய்வது ஆகியவற்றுக்கான முகவரிகளை அறிந்து கொள்வதே மேற்படி நிறுவனப்பிரதிநிதிகள் யாழ். வந்துள்ளதன் நோக்கமாகும்.

(உ 6)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் இன்று பி.ப 3.00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

படையினர் வெளியேறிய பாடசாலைகளின் நிலை, அந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்தல் தொடர்பான விபரங்களுடன் சங்கத்தின் மாவட்ட, கோட்டச் சங்க நிர்வாகிகளையும் கிளைச்சங்கங்களின் தலைவர்,செயலாளர், பொருளாளர் ஆகியோரையும் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## யோகாசன வகுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்திற்கு அருகிலுள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 6 30 முதல் 7.30 வரை யோகாசன வகுப்புக்கள்நடைபெற்று வருகின்றன.

இந்த யோகாசன வகுப்பில் பாடசாலை மாணவர்கள் மற்றும் வயோதிபர்களும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

(உ)

## தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

2002/2003 கல்வி ஆண்டுக்கு நுண்கலை மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை இம் மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

(த-19)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துமயான அபிவிருத்திச் சபைக் கூட்டம் எதிர் வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு கொக்குவில்பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

(உ-19)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

முன்னாள வங்கியாளர் சங்கமும்,முதியோர் நலனோம்பு சபையும் இணைந்து நாளை சனிக்கிழமைமு.ப.10மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் முதியோர்களுக்கான சட்டபூர்வமான உரிமைகள் பற்றிய கலந்துரையாடலை நடத்தவுள்ளன.

(உ)

# வலயக் கல்வி அலுவலகங்களில் தவம் கிடக்கும் சிங்களப் புத்தகங்கள்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் இவ்வாண்டு யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கவென அனுப்பப்பட்ட சிங்களப் புத்தகங்கள் வீணே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்களப் பாடத்தைப் போதிப்பதற்குரிய ஆசிரியர்கள் இன்மை மற்றும்,

அடிப்படைப் போதனையின்றி, 6 ஆம் தரத்தில் இருந்து போதிப்பதற்கேற்றவாறான சிங்களப் பாட நூல்கள் மாத்திரமேஅனுப்பிவைக்கப்பட்டமை ஆகியகாரணங்களால் பாடசாலைகள்பலவும் மேற்படி பாடப்புத்தகங்களைப்பொறுப்பேற்கமறுத்து விட்டன.

இதனால் கோட்டக் கல்வி அலுவலகங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள் என்பனவற்றில இப் புத்தகங்கள் வீணே உள்ளதாகவும்,

இவை வைக்கப்பட்டிருப்பதால் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, சில பாடசாலைகள் மாணவர்கள் மத்தியில் சிங்களப் புத்தகங்களை விநியோகித்த போதிலும், அவை எவ்வித பலனுமின்றி பெயரளவில் அவர்களிடம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-19)

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்.

குறள்

# வலம்புரி

## முக்கிய திருப்பம்

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடப்பதற்கான அறிகுறிகள் தென்படுகிறது. இதில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இலங்கை அமைச்சர் மெலிந்த மொறகொடவும், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளமை இனப்பிரச்சினைத் தீர்வில் முக்கியமான வரலாற்றுப் பதிவாகும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முக்கிய அமைச்சர் மெலிந்த மொறகொடவும் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கமும் சந்தித்துள்ளமை பூர்வாங்கமான பேச்சுவார்த்தையாக அமைந்துள்ளது.

இதேவேளை நோர்வேயின் வெளியுறவு அமைச்சர்களும் இச் சந்திப்பில் கலந்துகொண்டிருப்பது இருதரப்புச் சந்திப்பின் முடிவுகளை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும் அவ்வொப்பந்தம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்குமா என்ற சந்தேகம் அரசியல்அவதானிகளிடம் ஏற்பட்டிருந்தது. இச் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதாக அமைச்சர் மெலிந்த-பாலசிங்கம் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

ஜனாதிபதிக்கும் பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்குமிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையில் இச் சந்திப்பு ஏற்பட்டிருப்பது அரசியல் நெருக்கடிகளைத் தவிர்ப்பதாகவும் அரசு மீது பொது மக்கள் இழந்து வரும் நம்பகத்தன்மையைக் காப்பாற்றுவதாகவும் உள்ளது.

இதேவேளை அரசும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்க வேண்டுமென்பதே ஜனாதிபதியின் விருப்பமாகவும் இருப்பதால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் நோர்வேயில் இடம்பெற்ற மெலிந்த - பாலசிங்கம் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகவே கருதப்படும்.

அதனை வலுப்படுத்துவதாக அரசின் தீர்வுத் திட்டம் இருப்பது அவசியம்.

# வேதங்கள் விதந்துரைக்கும் வேதவல்லியிடம்

# வரம்வேண்டி அனுஷ்டிக்கும் வரலட்சுமி விரதம்

## வெள்ளி நற்சிந்தனை

### வரலட்சுமி விரதம் இன்று

மக்களின் இல்வாழ்விற்குத் தேவையான அஷ்ட ஐஸ்வரியங்களையும் தந்து நலலருள புரிபவள் ஸ்ரீமஹாலஷ்மிதன லட்சுமி, தானிய லட்சுமி, தைர்ய லட்சுமி, ஜயலட்சுமி, வீரலட்சுமி, சந்தான லட்சுமி, கஜலட்சுமி, வித்யா லட்சுமி, எனப்படும் அட்ட ஐஸ்வரியங்களையும் தருபவள். செல்வத்திற் கெல்லாம் அதிபதியான மஹாலட்சுமி உருவங் கொண்ட வரலட்சுமி ஆவாள் ஆண்டுதோறும்ஆவணிமாதத்தில் வரும்பூரணைதினத்திற்கு முன்வரும் சுக்லபட்ச வெள்ளியன்று ஸ்ரீவரலட்சுமி விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

**விரத மகிமை**

இந்த விரதம் சிறப்பாகப் பெண்களுக்குரியது. ஐஸ்வரியத்திற்கும், சுபிட்சத்திற்கும் தாயாக விளங்கும் லட்சுமி தேவியை குறித்து மங்கையர்கள் இந்நன்னாளில் பூசை செய்து வழிபடுகின்றனர். வேண்டும் வரந்தரவல்ல லட்சுமியைக் குறித்துப் பூசிப்பதனால் இது வரலட்சுமி பூசை என்று வழங்கிவருவதாயிற்று.

**கனவு கண்டாள் சாருமதி**

இவ்விரதம் பற்றி ஸ்ரீபரமேஸ்வரன் பார்வதி தேவிக்கு உபதேசித்ததாகக் கூறப்படுகின்றது. அதாவது குண்டினபுரம் என்ற ஊரில் நல்லொழுக்கம் கூடிய ஒருவர் இருந்தார். அவர்மனைவி சாருமதி உத்தமியானவள், அவள் அனைவரிடமும் அன்பாகவும் இனிமையாகவும் நடந்துவந்தனள். இவர்களிடம்உலகமாதாவாகிய ஸ்ரீதேவிமஹாலட்சுமி கருணை கொண்டாள். ஒருநாள் இரவு சாருமதிஒருகனவு கண்டாள். கனவில்மஹாலட்சுமி தோன்றி 'நீ ஆவணி மாதத்து பூரணை தினத்திற்கு முன்வரும் வெள்ளிக்கிழமை வீட்டைமெழுகிகோலமிட்டு, தோரணங்கட்டி பூரணகும்பம் வைத்து மங்கள விளங்கேற்றி தூபமிட்டு தம்பூலமும்நெய்வேத்தியமும்வைத்து பூக்களால் அர்ச்சனைபண்ணி கற்பூர ஆராதனை புரிந்து, திருமகளே வருக! நல்லருள் தருக! எனப் பூசித்து ஒன்பது இழை கொண்ட சரடு எனும் மங்கள நூலினை வைத்து வலது கையில் அணிந்து தான தருமங்கள் செய்துபெரியோர் நல்லோர் ஆசி பெறவேண்டும். ஆண்டு தோறும் செய்தால் சகல சௌபாக்கியங்களும் தந்து உன்னை ரட்சிப்போம்' என்று கூறி மறைந்தனள்.

மறுநாள் சாருமதி கணவனிடம் கூறி இருவருமாக அம்பாள் கூறியபடி விரதமனுஷ்டித்து சகல செல்வங்களும் பெற்று இல்லறத்தை நல்லறமாகக் கொண்டுவாழ்ந்தனர். இவ்வாறு பரமேஸ்வரன் பார்வதிக்கு கூறினார். பெண்கள் திருமணமானவுடன் கணவன் நலன் கருதி 'தலை நோன்பு' என்று இதைகொண்டாடுகின்றனர்.

**வேதங்கள்**

ஆக்கத்திற்கும் அருளுக்கும் தெய்வமென வரலட்சுமியை ரிக் வேதமும், சூரிய மண்டலத்தின் நடுவே மஹாலட்சுமி இருப்பதாக யஜுர் வேதமும் நல்லது கெட்டது என்றுஅவற்றுக்கு தேவதைகளை விவரித்து மஹாலட்சுமியை நல்லது செய்பவள் என அதர்வண வேதமும் கூறுகின்றன.

விஷ்ணு பகவானுக்கு அன்புக்குரியவளாயும், சௌந்தரியமான வதனத்துடன் மேலிரு கரங்களிலும் தாமரை மலரினையும் கீழிரு கரங்களிலும் அபயவரத முத்திரையுடனும் யானைகள், தாமரை மலரால் அர்சிக்க அஷ்ட ஐஸ்வரியங்களையும் தருபவளும், அமிர்தம் கடையும் போது தோன்றியவளுமாகிய ஸ்ரீதேவியாகிய மகாலட்சுமியை போற்றி வரலட்சுமி விரதத்தினை நோற்று நல்வாழ்வு பெற்றுய்வோமாக.

**மயூரகிரி**

நீர்வேலி

# சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி தந்த

# ஆக்கங்கள் கற்றோர் மனங்களைக் கவர்வன

(நேற்றைய தொடர்ச்சி)

ஆக, 1940 இன்பின்னர்பொ. கையின் போக்கிலே அசாதரண மாற்றமும், பண்டிதமணி, ச. பரநிருபசிங்கம் முதலானசாதகர்களைநெறிப்படுத்தும் பெருஞானமும் அதிதீவிர பக்குவமும் ஏற்படுகின்றன எனலாம். அதன் பின் நடந்தவையே பண்டிதமணி உப அதிபர் தொடர்பு 1942 இலிருந்து பண்டிதமணி குறித்து வைத்த குறிப்புகள வாயிலாகவும், அந்தக்குறிப்புக்களுக்கு பாஷியமாயமைந்த இலக்கிய கலாநிதி மு. கந்தையாவின் பாஷியம் வாயிலாகவும், ஆ. சபாரத்தினத்தின் தொகுப்பு விளக்கம்வாயிலாகவும், சிந்தனைகள் வாயிலாகவும் இம்மா மேதையின்வாக்குகள் மெல்ல மெல்லத் தெளிவடைகின்றன. இது வரவேற்கத்தக்கது.

இந்நூலிலே பொ. கை பற்றிய பாராட்டுரைகளில் பெரும் பான்மையானவை அவர் பற்றிப் பண்டிதமணி அவர்கள் வாயிலாக வெளிப்பட்டவற்றின் சாயைகளே. அவரின் நல்லாசிரியத் தகைமை, தம்முள் தாமாகவே ஒன்றிச் சாமானிய உலகிலிருந்து விடுபட்டு நிற்கும் இயல்பு, பல்துறை சார்ந்த தெளிவு நிறைந்த பேரறிவு, மேதைக் கேயுரிய தனித்துவப் போக்கு என்பனவேஇவர்கள் தம்உரைகளினால் பெருமளவு வெளிப்பட்டுள்ளனஎனலாம். அவற்றைத் தனித்தனி எடுத்துக் காட்டுவது கூறியது கூறல் என்பதன் பாற்படும். உலக அரங்கிலே இருபத்தைந்தாண்டுகளாய் உப அதிபர், விரிவுரையாளர் ஆகிய பாத்திரங்களைஏற்று அவர் ஆடல் புரிந்த சுவை நிறைந்த வரலாற்றுக்கும் அப்பாற்பட்ட சிந்தனைச் செல்வராக அவர் விளங்கியமையைப் பண்டிதமணியுடையவும், ச. பரநிருபசிங்கம் அவர்களதும் கட்டுரைகள் கூற்றுக்கள் வாயிலாகவே ஓரளவு விளங்கிக் கொள்ள முடிகின்றது.

அந்தக் கரண ஞானம்

''மேற்குலக சிந்தனையாளருள் மிக உயர்ந்தோர் சோக்கிரதீசரும் பிளேற்றோவும் தான், அவர்களுக்கு மேலே சிந்தித்தவர் அங்கே ஒருவரும் இல்லை. ஆனால், அவர்களிருவரும் விட்ட இடத்திலிருந்து தான் இங்கேயிருந்த வைதிக சிந்தனையாளர் ஆரம்பித்திருக்கிறார்கள்''

என்பது உப அதிபரவர்களின் கருத்து என்று எடுத்துக் காட்டும் ச. பரநிருபசிங்கம் மிகப் பொருத்தமானதோர் உண்மையைத் தாம் உணர்ந்தவாறு எடுத்துக் காட்டியுள்ளார் எனலாம்.

வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள் என்பவற்றிலே துறை தோய்ந்த பொ. கை தமது அந்தக் கரண ஞானத்தில் நின்று அவற்றுக்கு வேறாகவும் சில சொல்லியுள்ளார் என்றும் தெரிய வருகின்றது. இது பற்றி மு. கந்தையா தாம் எழுதிய சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி என்ற நூலின் முகவுரையிலே கூறியுள்ளதுபொருத்தம்என்பதால் அதனை ஈண்டு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

''இனி, சைவசித்தாந்த தத்துவ அமைவில் அந்தக் கரணங்கள் என்ற ஒரே கூற்றிலடங்கும் மனோ விருத்தி, புத்தி விருத்தி, அஹங்கார விருத்தி என்ற கட்டங்களில் வைத்தே சைவ சித்தாந்த அனுபவம் முழுவதையும் கையடக்கமாகப் புலப்படுத்த முயலும் கைலாசபதி ஸ்மிருதி பிரசித்தமான சிவாகம முடிபுகளோடும், ஓரளவிற் சைவத் திருமுறை அனுபவங்களோடும் கூடப் பெரும்பாலும் ஒட்டாமலே செல்வதாகக் காணப்படுகின்றது. அத்தொடர்பில் சாஸ்திர உரை, உரை மேற்கோள்கள் சிலவும்பிறழ்வான அர்த்தவிமர்சனத்துக்குள்ளாகநேர்ந்துள்ளது...''

-மேற்படி நூல், முன்னுரை. ப. XI

**பண்டிதமணியும் கைலாசபதியும்**

தமக்கு நடத்திய வகுப்புக்கள் ஆயிரத்துக்கு மேலிருக்கும் எனக் குறிப்பிடும் பண்டிதமணி தமது அறிவனுபவத்தைப் பின்வருமாறு எடுத்துரைக்கக் காணலாம்:

''இராமாநுஜத்தின்கணிதமுடிவுகளை ஹார்டி என்பவர் விளங்காமலும் எழுதிவைத்திருந்தார் என்று கேளவிப்பட்டதுண்டு. பெரியவர்களிடத்து நடந்து கொள்ளும் ஆசாரத்தைத் தழுவிப் பல வருஷங்களாக அவர் முன்னிலையில் நடந்து கொள்ளும் ஆசாரத்தை தழுவி பல வருஷங்களாக அவர்முன்னிலயில்அவர் சிந்தனைகளிலே சொன்னவைகளுள் எழுதக் கூடியவைகளை எழுதிக் கொண்டேயிருந்தேன். எனக்கு எட்டாதவைகளை ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறார்

(8ஆம் பக்கம் பார்க்க)

கலாநிதி குகஸ்ரீ

**க. சொக்கலிங்கம் எம். ஏ.**

## தினசரி தியானம்

### கணக்கெடுப்பு


ஒவ்வொரு நாளும் படுக்கப் போகும் முன் அன்றைக்கு உங்கள எண்ணங்கள், பேச்சுக்கள் மற்றும் செயல்கள் பற்றிய கணக்கைத் தொகுத்து எடுத்துப் பாருங்கள். இன்று நான் எந்த தீய பழக்கத்தை மேற் கொண்டேன், எந்த உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டேன், என்ன நல்ல பண்பை வளர்த்துக் கொண்டேன், எந்த இந்திரியத்தை இன்று அடக்கினேன் என்று காணுங்கள், இப்படிச் செய்வதன் மூலம் விரைவில் வளர்ச்சி அடைவீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# சமாதானப் பேச்சுக்கான திகதி நிர்ணயிப்பு

# இனப்பிரச்சினைத் தீர்வில் முக்கிய திருப்பம்

## அரசாங்கக்குழு அங்கத்தவர்கள் மத்தியில் பிரதமர் உரை



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் படுவதற்குரிய திகதி, அடுத்த மாத நடுப்பகுதியில் தீர்மானிக்கப்பட்டிருப்பது முக்கியமானதும் தீர்க்கமானதுமான ஒரு நடவடிக்கையாகும்.

இவ்வாறு பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்கா பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் அரசாங்கக் குழு அங்கத்தவர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை அரசாங்கக்குழு அங்கத்தவர்கள் மத்தியில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் அமைச்சர் மிலிந்த மொறகொட விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர கலாநிதி அனரன பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து பிரஸ்தாபித்தார்.

அதன் போதே பேச்சுவார்த்தைக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டமை இனப்பிரச்சினைக்த் தீர்வு விடயத்தில் மிகமுக்கியமான தீர்க்கமான நடவடிக்கை என்கிறார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

தாய்லாந்தில் அடுத்தமாத நடுப்பகுதியில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதான முயற்சிகள் மேலும் பலமடையும்.

பல தரப்பட்ட தடைகள் கட்டுப்பாடுகள் இருந்த போதும் சமாதான முயற்சிகளை வெற்றியடையச் செய்யும் வகையில் அர்ப்பண சிந்தையுடன் பணியாற்றிய ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஏனைய கட்சிகளின் அங்கத்தவர்களுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகளில் தாமதங்களும் பிரச்சினைகளும் எதிர்நோக்கப்பட்டாலும் அதனை எல்லாம் வென்றெடுத்து முன்னேறிச்செல்ல அனைவரும் திட சங்கர்ப்பம் பூண வேண்டும் என்றும் பிரதமர் அரசாங்கக்குழு அங்கத்தவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் விரும்பும் சகல மக்களையும் ஒன்று சேர்க்கும் மக்கள் சக்தித் திட்டம் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இத்திட்டத்தை அடுத்தமாதம் நடைமுறைப்படுத்துவது என்றும், ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் மத்தியில் மக்கள் சக்தித்திட்டம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்றும்,

அதற்கு ஏற்ற வகையில் மாவட்டக் குழுக்களின் கூட்டத்தை நடத்துவதென்றும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(இ)

### மிலிந்த - பாலசிங்கம்...

பின்னர் பாராளுமன்றத்தை ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் கலைக்க முடியம்.

இந்த அச்சநிலையைப் போக்கவும் சமாதானத்தை முன்னெடுக்கும் வகையிலும் எதிர்வரும் டிசம்பர் ஐந்தாம் திகதிக்கு பின்னர் பாராளுமன்றத்தை கலைப்பதில்லை என்று ஜனாதிபதி சபாநாயகருக்கு உறுதியளிக்கும் வகையிலேயே எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளாரென்று கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டை தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து காப்பாற்றுவதிலேயே ஜனாதிபதி முழுக் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த நிலையில் அவர் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த ஜனாதிபதி உத்தரவிடுவார் என்று சிலர் தவறான பிரசாரம் செய்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரசாங்கத்திற்கும் அரசின் நடவடிக்கைளுக்கும் ஜனாதிபதி பூரண ஆதரவு தெரிவித்துள்ளார். புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் அமைச்சர் மிலிந்த மொறகொட பேச்சுநடத்தி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு காலம் குறித்திருப்பதையும் ஜனாதிபதி பாராட்டியுள்ளார் என்றும் கதிர்காமர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ)

### சமாதானப்...

இதேவேளை பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அரசியல் யாப்புத்திருத்தம் அடுத்தமாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். பாராளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சிப்படி நடந்து கொள்வதற்கான சட்ட மூலத்தையும் விரைவில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமான மேற்கொண்டு வருகின்றது.

அரசியலமைப்புத் திருத்தங்களை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் அவர்கள் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டுமாயின் பாராளுமன்றம் ஸ்திரமாக இருக்க வேண்டியது அவசியமாகும். பாராளுமன்றம் கலைப்

## படையினர் எடுத்துச் சென்ற படகை யு.என்.எச்.சி.ஆர் மீட்டுக்கொடுத்தது

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட பள்ளிக்குடா மீனவரின் படகை யு.என்.எச்.சி.ஆர் அமைப்பினர் மீட்டுக்கொடுத்துள்ளனர்.

பள்ளிக்குடாவைச் சேர்ந்த கே. சதீஸ்வரன் என்பவரது படகே மீட்கப் பட்டதாகும்.

கிளாலிக் கடற்பரப்பில் கடற்படையினர் அனாதரவாக தத்தளித்த மேற்படிப் படகை எடுத்துச் சென்றனர்.

அதனை பிரஸ்தாப நபர் மீட்டுத் தருமாறு யு.என்.எச்.சி.ஆர் அமைப்பிடம் கோரியதை அடுத்து கடற்படையினருடல் தொடர்பு கொண்ட யு.என்.எச்.சி.ஆர் படகை மீட்டுக்கொடுத்துள்ளது. (இ)

### காணாமல் போனோர்...

கம் தெரிவித்தார்.. இச்சந்திப்பின் போது பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் கலந்து கொண்டார்.

இதேவேளை சிறைச்சாலைகளுக்கு சென்று பார்வையிடுதற்கு பிரதமர் அனுமதியளித்ததன் பேரில் இன்று பூசா தடுப்பு முகாம் மற்றும் களுத்துறைச் சிறைச்சாலை ஆகியவற்றுக்கும்:

நாளையதினம் கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலை, நீர்கொழும்பு சிறைச்சாலை ஆகியவற்றுக்கும்

எதிர்வரும் திங்கட்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்கும் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துச் சென்று நேரில் பார்வையிடவுள்ளதாகவும் இதன் பின்னர் மீண்டுமொரு தடவை பிரதமருடன் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

(த)

### விமானப்படையின்...

இதுவரை மீட்கப்படவில்லை.

விமானப்படையின் உபயோகத்திற்காக 1993ம் ஆண்டு கொள்வ

5ம்தர புலமைப்பரீட்சை

### வினாத்தாள் பரீட்சைக்கு முன்னரே வெளியாகிவிட்டதாம்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள பரீட்சைக்கு முன்னரே வெளியாகி விட்டதாக திடுக்கிடும் தகவலொன்று வெளியாகியுள்ளது.

மத்திய மாகாணப்பகுதியில் உள்ள சில பாடசாலைகளில் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னரே பரீட்சை வினாத்தாளை ஆசிரியர்கள் பயன்படுத்தி மாணவர்கள் சிலருக்கு வழிகாட்டியுள்ளார்களென்று, மத்திய மாகாணகல்வி அமைச்சர் ராதாகிருஷ்ணனிற்கு பெற்றோர்கள் தரப்பிலிருந்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. (இ)

ஹற்றன் நஷனல் வங்கியின்
ஆதரவில்
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால்
நடத்தப்படும்

யமாகும். பாராளுமன்றம் கலைப்புத் தொடர்பான அச்சுறுத்தல் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை பொது வசதிகள் ஆணைக்குழு அமைத்தல், சங்கத் திணைக்களத்தை மறுசீரமைப்பது, மின்விநியோகத் திட்டத்தை நவீனமயமாக்குவது மற்றும் கதிர்காமத்தை புனித பிரதேசமாக்குதல் ஆகிய தீர்மானங்கள் அமைச்சரவையில் எடுக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் கூறினார். (த)

திற்காக 1993ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட இவ்விமானதில் நூறு பேர் பயணம் செய்ய முடியும்.

விமான விபத்துக்கான காரணம் இதுவரை அறியப்படாததால் அதனை விசாரிக்க 4பேர் கொண்ட விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற முதலாவது விமான விபத்துச் சம்பவம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)


# பதவி வெற்றிடம்

எமது பத்திரிகைக் காரியாலயத்திற்கு

## விநியோக உதவி முகாமையாளர் தேவை

க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தியடைந்த 30 வயதிற்குட்பட்டவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பங்கள் யாவும்**

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி
15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

எல்லும் முகவரிக்கு எதிர்வரும் 18ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும

**குறிப்பு** : சொந்தமான மோட்டார் சைக்கிள் வைத்திருப்பது அவசியமாகும்.

-நிர்வாக உத்தியோகத்தர்-

## 2002ம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள்

**இடம்:-** யாழ். பரியோவான் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடல்

**காலம்:-** இன்று (16. 08. 2002) வெள்ளிக்கிழமை

**பிரதம விருந்தினர்:-** நியன்சி. டி. விஜயதிலக.
(நிர்வாக முகாமைத்துவ பணிப்பாளர், ஹற்றன நஷனல் வங்கி)

**பங்குபற்றும் பாடசாலைகள்:-**

**பெண்கள்:-** வேம்படி மகளிர் உயர் கல்லூரி
எதிர்
கொக்குவில் இந்துக் கல்லூரி
(பி. ப. 4 .30 மணி)

**ஆண்கள்:-** யாழ். மத்திய கல்லூரி "A"
எதிர்
யாழ்ப்பாணக் கல்லூரி
( பி. ப. 5. 30 மணி)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஹற்றன் நஷனல் வங்கி**
**உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி**

(C/4853)



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 16.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.